கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், நீவது.,
வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்-1.

முன்னிலை:- பொறி.R.பாஸ்கர், பி.இ.,
கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து.,

செயல்முறை ஆணை எண்: 201/ஆ2/2022/நாள்:.02.09.2022

பொருள்:- பணியமைப்பு-பொபது - த.நா.அ.ப.தொகுதி- கருணை அடிப்படையில் பணிநியமனம் - திருமதி.கு.ராஜகுமாரி, இளநிலை உதவியாளர் க/பெ.காலஞ்சென்ற திரு.ஜி.குணசேகரன் - கொள்ளிடம் வடிநில கோட்டம், நீ.வ.து., சிதம்பரம் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் - பணிவரன்முறை செய்து ஆணை வழங்கல் - சார்பு.

பார்வை:- 1)செயற்பொறியாளர், நீ.வ.து.. கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்களின் கடித எண்.655/நி.எ.1/கோ.2/2022/ நாள்.08.07.2022.

2)இவ்வலுவலக கடித எண்.ஆ2/939/2022/நாள்.18.07.2022.

3) தலைமைப்பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சென்னை அவர்களின் கடித எண்.இ1(1) /7543/2022/நாள்.10.08.2022.

4)அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு க்யூ-1/துறை/நாள்.26.02.2021.

5)இவ்வலுவலக கடித எண்.594/ஆ2/1131/2022/நாள்.24.08.2022.

6)செயற்பொறியாளர், நீ.வ.து.. கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்களின் கடித எண்.655/நி.எ.1/கோ.2/2022/ நாள்.29.08.2022.

---------

ஆணை:-

உதவிசெயற்பொறியாளர், பொபது., மின்உபகோட்டம், திருச்சி அலுவலகத்தில் உதவியாள் (மின்தரம்-II)ஆக பணிபுரிந்து வந்த திரு.ஜி.குணசேகரன் அவர்கள் 07.07.2008 அன்று காலமானதை தொடர்ந்து இவரது வாரிசு மனைவி திருமதி.கு.ராஜகுமாரி என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 27.08.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். இவர் இப்பதவிக்குண்டான குறைந்தபட்ச கல்வித்தகுதி பெற்றுள்ளார் என்றும், இவரது பிறந்த தேதி. 20.04.1974 ஆகும். இவர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது தகுதியினை பெற்றுள்ளார். திருமதி.கு.ராஜகுமாரி, அவர்கள் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயதுதகுதிகளை பெற்றுள்ளார் என்றும், திருமதி.கு.ராஜகுமாரி அவர்களின் பணிவரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து ஆவணங்களையும் பார்வை எண்.1ல் காணும் செயற்பொறியாளர், நீ.வ.து., கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்களின் கடித எண்ணின்படி இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்து, தனியர் தற்காலிக இவ்வட்ட பணியில் சேர்ந்த நாளான 27.08.2018 மு.ப முதல் அப்பதவியில்

(த.பி.பா.)

F:\ab\ADII\Proc. Tamil\Proc -2022.docx

பணிவரன்முறை செய்து தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். இதன்தொடர்ச்சியாக இக்கருத்துரு பார்வை எண்-2ல் காணும் இவ்வலுவலக கடித எண்ணின்படி தலைமைப்பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சென்னை-5 அவர்களுக்கு பணிந்து அனுப்பிவைக்கப்பட்டது.

பார்வை எண்-3ல் காணும், தலைமைப்பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சென்னை-5 அவர்களின் கடிதத்தில் பார்வை எண்.4-ல் காணும் அரசாணைக்கிணங்க இவரது பணிவரன்முறை சம்பந்தமான ஆணைகளை வட்ட அளவிலேயே வழங்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, பார்வை எண்-6ல் காணும் கடிதத்தில் இவருக்கு உரிய பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக்கோரி செயற்பொறியாளர், நீ.வ.து., கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்கள் உரிய கருத்துருவை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

எனவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையிலும், அரசாணை எண்.48/ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு/க்யூ.1/துறை/நாள்.26.02.2021-ல் வழங்கியுள்ள தெளிவுரைகளின் அடிப்படையிலும் திருமதி.கு.ராஜகுமாரி, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியை அவர் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 27.08.2018 மு.ப. முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

(ஒம்...)
கண்காணிப்புப்பொறியாளர்,நீ.வ.து.,
வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்-1.

பெறுநர்:-

திருமதி.கு.ராஜகுமாரி,
இளநிலை உதவியாளர், நீ.வ.து.,
கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம்.

வழி:- செயற்பொறியாளர், நீ.வது., கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம்.

நகல்:- முதன்மை தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) நீ..வது. சேப்பாக்கம் சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்:- தலைமைப்பொறியாளர், நீவது., சென்னை மண்டலம், சென்னை-5. அவர்களுக்கு தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.

பதிவு அஞ்சல் மூலம்:-

நகல்:- செயற்பொறியாளர், நீ.வ.து., கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்களுக்கு தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது. திருமதி.ராஜகுமாரி, இளநிலை உதவியாளர் அவர்களின் பணிப்பதிவேடு மற்றும் அவரது ஆவணங்களை இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்கண்ட ஆவணங்களை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதலை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:-** பணிப்பதிவேடு மற்றும் ஆவணங்கள் பெற்றவாறே

உபரிநகல் -1

கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து.,சார்பில்
வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்-1.

2/9/2022

F:\ab\ADII\Proc. Tamil\Proc -2022.docx